1987 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போன்று அந்த இடத்தில் தீ விபத்து திடீரென்று ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதை காவல்துறை புலனாய்வு செய்து கொண்டிருக்கிறது. அது சதி செயலா, தற்செயலாக ஏற்பட்டதா என்பதெல்லாம் புலன் விசாரணை அறிக்கை வந்ததற்குப் பிறகுதான் அரசுக்குத் தெரியும். அப்படித் தெரிகிற சூழ்நிலை ஏற்படுகிறபோது இந்த அவைக்குத் தெரிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பொது மருத்துவமனையில் பெண் நோயாளி கற்பழிப்பு.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய 'தினமணி' நாளேட்டில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வந்த பெண்ணை கற்பழித்ததாக இரண்டு வார்டு ஊழியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. செவ்வாய் அன்று இரவு நெஞ்சு வலியின் காரணமாக அப்பெண்மணி அரசு பொது மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வந்திருக்கிறார். அங்கே தீவிர சிகிச்சைப் பிரிவில் பரிசோதித்த பிறகு அங்கே எழுதிக் கொடுத்திருக்கிற மருந்துகளை பெறுவதற்காக இரண்டு வார்டு ஊழியர்களிடம் வழி கேட்டிருக்கிறார். வழி காட்டுவதாகச் சொல்லி தனியாக ஓர் இடத்திற்கு தீய எண்ணத்தோடு அழைத்துச் சென்று அங்கே மிருகத்தனமாக கற்பழித்திருக்கிறார்கள் என்ற செய்தியைப் படிக்கின்றபோது உண்மையிலேயே வேதனை தரக்கூடியதாக இருக்கிறது. அரசு மருத்துவமனையில் பணி புரியும் அரசுப் பணியாளர்களுக்கு இப்படிப்பட்ட தவறுகளை செய்ய ஏற்படும் அசாத்தியமான தைரியத்தை கண்டிப்பதோடு இந்த அவல நிலை பெண்கள் மட்டத்தில் அச்சத்திற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதால் எதிர்காலத்திலே மகளிருக்கு இப்படிப்பட்ட கேவலமான நிலை ஏற்படாத வண்ணம் உருவாக்க அரசு என்ன பாதுகாப்பை எப்படி கொடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். அந்த இரண்டு ஊழியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உங்கள் மூலமாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

[1987 மார்ச் 26

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி நேற்றைய தினமே எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. உடனே நடவடிக்கை எடுத்து கைது செய்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இன்றி கிரிமினல் வழக்குக்கு ஒப்படைக்க வேண்டும் என்றும் நான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தோடு அரசு நிச்சயமாக தன் கருத்தையும் ஒன்றி கடும் நடவடிக்கை எடுக்கும் என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்திலே நடைபெறாதவாறு பார்த்துக்கொள்ள என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அதைப்பற்றி நிச்சயமாக அங்கேயிருக்கின்ற டீன், மற்றவர்களை அழைத்து பேசி நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற காலித்தனம் செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கடும் நடவடிக்கைக்கு உள்ளாக்க வேண்டும் என்றும், கிரிமினல் குற்றத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்றும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதோடு ஒன்றை கூட சேர்க்கவும் நான் விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் எடுத்து தெரிவித்ததற்கிணங்க உள்ளபடியே வேதனைக்குரிய, வருத்தத்திற்குரிய இப்படிப்பட்ட ஒரு அக்கிரமமான, கயமைச் செயல் நடந்திருக்கக் கூடாது, தடுத்து நிறுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே உள்ள பெரிய மருத்துவமனைகள் போன்ற இடங்களில் போதுமான அளவிற்கு பாதுகாவலர்களை போட்டிருக்கிறோம். இதிலே கூட கூச்சல் தன்மையைக் கேட்டவுடனே காவலர்கள் இருவர் ஓடிப்போய் அவர்களைத் தடுத்திருக்கிறார்கள். அந்தக் காவலர்கள் இரண்டு பேரையும் தாக்கியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலேதான் அந்த இரண்டு பேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால் உடனே தப்பித்து ஓடியிருப்பார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூறியது மாதிரி இப்படிப்பட்ட அநாகரிகமான, காட்டுமிராண்டித் தனமான, மிருகத்தனமான செயல்கள் நடைபெறாமல் இருப்ப

1987 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தற்கு எச்சரிக்கையாக நடவடிக்கையை எந்த வகையிலே எடுக்கலாம் என்பது குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறையோடு கலந்து தக்க முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அரசினர் தீர்மானம்.

விதி 55 (6)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பேரவையின் 55 (6)-வது விதியின்கீழ் இரண்டிற்கு மேற்பட்ட கவன ஈர்ப்புப் பொருள்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற விதியைத் தளர்த்தி, இன்றும் மற்றும் இக்கூட்டத் தொடர் முழுவதும் இரண்டிற்கு மேற்பட்ட கவன ஈர்ப்புப் பொருள்களை எடுத்துக் கொள்ளலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பெற்றது.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டுக்கு மேற்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 80 கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான பதில்கள் வந்திருக்கின்றன. உறுப்பினர்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் இப்படிச் செய்திருக்கிறேன். நேற்று வரை வந்திருக்கிற பதில்கள் 80. ஆகவே நேரத்திற்கேற்ப ஒரு நாளைக்கு ஐந்து என்று எடுத்துக் கொள்ளலாம்.

(முற்பகல் 11-10)

4. கவன ஈர்ப்பு.

(அ) பெரம்பலூர் பாண்டகப்பாடி கிராமத்தில் நில ஆக்கிரமிப்பு

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதி பாண்டகப்பாடி கிராமத்திலுள்ள ஆயிரக்கணக்கான அரசு புறம்போக்கு நிலங்களை அரசு அதிகாரிகளும், செல்வந்தர்களும் பட்டா பெற்